**தலைப்பு 264 - யாழ்ப்பாண மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1(இ)(ii) | காரைநகர் பிரதேச செயலக கட்டிடம் ரூபா 58 மில்லியன் செலவில் தனியார் காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த காணியின் பெறுமதி ரூபா 2 மில்லியன் ஆக நிதிக்கூற்றில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்த காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணியை அரசாங்கத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வலிகாமம் வடக்கு பிரதேச செயலக கட்டிடம் ரூபா 56,023,874 தொகை செலவில் உரித்தற்ற காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் உரித்தை கையேற்பதற்கு 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் காணியின் பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்பட்டுள்ள பதில் அவதானிப்புக்கு உரித்தற்றதாகும். | காணியின் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்துதல் மற்றும் காணியின் உரித்தை கையேற்றல் வேண்டும். |
| (ஆ) வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலக கட்டிடத்திற்குரிய காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட ரூபா 31,500,000 குறைவாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தரவுகளை உள்ளடக்கும் போது ஏற்பட்ட வழுவாகும். பின்னர் சரிசெய்யப்பட்டுள்ளது. | தரவுகளை உள்ளடக்கும் போது வழுக்களை தவிர்க்க கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை

கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய | பேணிச்செல்லப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை |

| | | | |
|---|---|---|---|
| | பிணை பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | | வைக்க வேண்டிய உத்தியோகத்தர் கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று கடந்த 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பேணிச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அரசாங்கத்தின் கட்டிடங்களில் காணப்படுகின்ற சகல மின்சார உபகரணங்கள் தொடர்பாக பொருள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 110 மாதிரிக்கு இணங்க இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியம் நலன்புரி கிளையினால் நாளதுவரையாக பேணிச்செல்லப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 110 இல் காண்பிக்கப்பட்டு ள்ள மாதிரிக்கு இணங்க இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டியின் பிரகாரம் குழுவின் செயலாளரினால் வருகை பதிவேடு கடந்த 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் பிரிவினால் வருகை பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படுகின்றது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டியின் பிரகாரம் குழுவின் செயலாளரால் வருகை பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கேள்வி கோரல் பதிவேடோன்று கடந்த 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் பிரிவினால் கேள்வி கோரல் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படுகின்றது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.2.1 வழிகாட்டியின் பிரகாரம் குழுவின் செயலாளரால் கேள்வி கோரல் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் மீள்குடியமர்த்தல் பிரதேசங்களை துப்பரவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4,426,983 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக போதியளவான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் மூல ஆவணங்கள் இணைக்கப்பட்ட போதிலும் சில ஆவணங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுடன் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் இன்றி யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் 56 கொடுப்பனவுகள் உறுதிச்சீட்டுக்களுக்காக ரூபா 12,370,862 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்த முடியுமான ஆவணங்களின் பிரதிகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி கட்டுநிதி ரூபா 136,775,045 கிடைக்காதிருந்தமையால் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கும், திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் மாவட்ட செயலகத்திற்கு முடியாதிருந்தது. | திறைசேரியினால் பணத்தை விடுவிக்கும் போது காலதாமதம் ஏற்பட்டிருந்தமையால் மொத்த தொகையையும் பெறுவதற்கு முடியாதிருந்தது. | அதிக தேவை காணப்படுகின்ற பணிகளுக்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 செலவின விடயங்களுக்காக ரூபா 6,880,000 ஏனைய செலவின விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்ட தொகை அந்தந்த செலவின விடயங்களின் ஆரம்ப நிதியேற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் சில செலவின விடயங்களில் பயனுள்ளதாக கட்டுப்படுத்தப்பட்டமையினால் ஏற்பட்ட சேமிப்புக்கள் தேவையின் அடிப்படையில் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | செலவின மதிப்பீடு சரியான முறையில் திட்டமிடப்படுதல் வேண்டும். |

### 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 10 இனால் மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டிருந்த மூலதன நிதியேற்பாடு, உத்தேசிக்கப்பட்ட பிரகாரம் பயன்படுத்தப்படாமையினால் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 184,701,364 தொகை அதாவது 6 சதவீதத்திற்கும் 85 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | திறைசேரியிலிருந்து கட்டுநிதி விடுவிக்கும் போது ஏற்பட்ட தாமதம் மற்றும் சில அமைச்சுக்களினால் நிதியேற்பாடு விடுவித்தல் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டமை என்பவற்றினால் அந்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மூலதன செலவினங்கள் சரியான பிரகாரம் மதிப்பீடு செய்தல் மற்றும் நிதியேற்பாட்டை ஆக்கபூர்வமான தாக பயன்படுத்தல். |

## 2.4 சட்டம், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 113 | 2,076,809 | இழப்புக்கள் பதிவேட்டில் காணப்பட்ட 19 வருடங்கள் முதல் 33 வருடங்கள் வரையான பழைய மீதியை பதிவழிப்பதற்குள்ள இயலுமை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிச் சுற்றறிக்கையின் 01/2020 இன் பிரகாரம் தேவையான அங்கீகாரம் கிடைத்த பின்னர் தீர்த்து வைக்கப்படும். | நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 237(அ)(i) | 8,615,147 | யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகங்களில் கொடுப்பனவு செய்யும் போது உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | தற்போது உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இணைக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 237(அ)(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | 23,062,785 | மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் 64 காசோலைகள் எழுதப்பட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட பொருட்கள் வழுக்களுடன் இருந்தமையினால் அதற்கு பதிலாக மீண்டும் பொருட்கள் பெறப்படும் வரையும், சில பொருட்கள் வழங்குவதில் தாமதம் | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏற்பட்டமையினாலும் காசோலைகளை நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. 10 காசோலைகள் மாத்திரம் தீர்ப்பதற்கு எஞ்சியுள்ளது. | |
| (iv) | நிதிப்பிரமாணம் 260(1), (2) | 118,899 | யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் உரித்தாளருக்கு அல்லது அவரின் சட்டரீதியான பிரதிநிதிக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமல் அந்த அலுவலகத்தின் கணக்காளருக்கு காசோலை எழுதப்பட்டிருந்தது. | பொதுவான செயற்பாட்டை மீறும் வகையில் இந்த பணிகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களின் விளக்கமளித்தல்கள் பெறப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 260(1), (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 386(5) | 16,204,512 | மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களால் நானாவித கொடுப்பனவுகளுக்காக காசோலை விநியோகிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டு அவை கையில் வைக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப ஆவணங்கள் கிடைத்திருந்த போதும் உறுதிப்படுத்தும் ஆவணங்களும் கிடைக்கும் வரை காசோலைகளில் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 386(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 08/2019 ஆம் இலக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | 250,000 | நெடுந்தீவு தெற்கு மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்ளில் உபசரிப்பு செலவினங்கள் மாதாந்த படியாக சம்பளத்தில் சேர்த்து வழங்கப்பட்டிருந்தது. | தற்போது உபசரிப்பு கொடுப்பனவுகள் உறுதிச்சீட்டுக்கள் மூலம் மீளளிப்புச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 137 இற்கு முரணாக அங்கீகரிக்கப்படாத ரூபா 18,236,564 தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக பணம் செலுத்துவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுத்திருந்தது. | இது சரிசெய்யப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 137 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### (ஆ) உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 138 மற்றும் 257 இற்கு முரணாக உறுதிப்படுத்தப்படாத ரூபா 15,383,662 தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுத்திருந்தது. | அசாதாரண காலநிலை நிலைமை மற்றும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக உதவி ஆவணங்களை சமர்ப்பித்தலில் சில காலதாமதங்கள் ஏற்பட்டிருந்தது. தற்போது இந்த விடயங்கள் சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 138 மற்றும் 257 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் 56 நலனாளிகளுக்கு ரூபா 5,000 வீதம் வழங்கப்பட்டமைக்கான விடயங்கள் காண்பிக்கப்பட்டு | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய தொடர்புடைய | மோசடிகளைத் தடுக்கும் வகையில் பொருத்தமான உள்ளக |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட ரூபா 280,000 தொகையான நிதி மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கையுடன் இடமாற்றங்களும் வழங்கப்பட்டிருந்தன. உரிய பணத்தை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு அந்த பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கட்டுப்பாட்டு முறைமை யொன்று ஏற்படுத்துதல் வேண்டும். |

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் பிரகாரம் ஓய்வுபெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான காலம் நிலுவையாக காணப்பட்ட ரூபா 708,549 தொகையை அறவிடுவதற்கு தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக இருந்த ஒரு மீதி பிணையாளரிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகின்றது. | நிலுவையாக உள்ள மீதிகளை தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். |

**2.8 வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 பிரதேச செயலகங்களுக்கு பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக கிடைத்த ரூபா 486,989 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து வைப்புக் கணக்கில் காணப்பட்டது. உரிய செயற்திட்டங்கள் பூர்த்தி | இந்த வைப்புக்களை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய வைப்பு மீதியை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்குமாயின் அந்த பணத்தை மீள அனுப்புவதற்கோ அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒரு செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 13,458,697 தொகை உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மாவட்ட செயலகத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மீளச் செலுத்த வேண்டிய ரூபா 2,206,004 தொகையான ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த வைப்புக்களில் ரூபா 550,937 தொகையான வைப்புக்கள் தீர்க்கப்பட்டுள்ளது. ஏனைய வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571 இற்கு இணங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.9 வங்கிக் கணக்குச் செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 மாதங்களுக்கு மேல் காலாவதியான போதும் கொடுப்பனவுகளுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 5,891,523 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 391 மற்றும் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு | மூலதன பணிகளின் வேலைப் பகுதி பூர்த்தி செய்யப்படாமையால் காசோலைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் காசோலைகள் விநியோகிக்கப்படும். | நிதிப்பிரமாணம் 391 மற்றும் 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாவட்ட செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 50 சிறிய தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் யோகட் உற்பத்தி நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,336,300 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் (Batch Pasteurizer) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | இந்த இயந்திரத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான பிரதான உதிரிப்பாகங்கள் உரிய வழங்குனரினால் இதுவரை வழங்காதிருந்தமையால் அது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. அந்த உதிரிப்பாகங்கள் கிடைத்ததும் உடனடியாக அந்த இயந்திரத்தை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான உதிரிப் பாகங்கள் இன்றி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை நடாத்துதல் வேண்டும். |
| (ஆ) | மீன்பிடி குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 690,849 பெறுமதியான 152 வலைகள் 03 வருட காலம் முதல் வடமராட்சி பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | இந்த வலைகள் ஆழமான கடலில் மீன்பிடிப்பதற்குப் பொருத்தமானது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் இந்த வலைகளை தேவையான நலனாளிகளுக்கு வழங்குவதற்கு மாவட்ட செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொள்வனவு செய்வதற்கு முன் தேவையினை சரியாக இனங்காண்பதுடன் செயற்பாடற்ற சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் நிர்மாணிப்பதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களால் அமுல்படுத்தப்பட்ட 11 செயற்திட்டங்கள், குறித்த காலஎல்லையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த காலதாமதத்திற்காக ரூபா 1,260,469 தொகையான தாமதக் கட்டணம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமை, காலநிலை மாற்றமடைந்ததன் அடிப்படையில் நிலக் கீழ் நீர் மட்டம் குறைவடைவதற்கு காலம் எடுத்தமை போன்ற காரணங்களினால் குறித்த காலத்தில் சில செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எனினும் ஒப்பந்த நிறுத்தி வைத்தல் தொகையிலிருந்து அல்லது நேரடியாக இந்த பணத்தை செலுத்துமாறு உரிய ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே காண்பிக்கப்பட்டுள்ள தாமதக் கட்டணங்களில் ஒரு தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கும், பணிகள் தாதமடைகின்ற சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2019 நவம்பர் மாதத்தின் போது கன்றுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நாற்றுமேடைக்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தால் ரூபா 425,626 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 15 மாதங்கள் கடந்திருந்த போதிலும் 2021 மார்ச் வரையிலும் அந்த கன்றுகள் கிடைத்திருக்கவில்லை. | பிரதேசங்கள் முடக்கப்பட்டமை, காலநிலை மாற்றமடைந்தமையின் காரணமாக குறித்துரைத்த காலத்தில் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. மிகவும் விரைவாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழ்ச்சித் திட்டத்தை குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்துதல் மற்றும் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு ஒட்டுமொத்த முயற்சிகளை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 50 சிறிய தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 30,388,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் எந்த ஒன்றும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தேவையான அனுபவம் இல்லாமையினால் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது. கிடைக்கப் பெற்ற பணத்தை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்படவில்லையென அறியத் தருகின்றோம். | செயற்திட்டத்தை அமுல்படுத்து வதற்குமுன் தேவையான மனித வளங்கள் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஈ) | நிர்மாணப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியுமான போதியளவான பௌதீக மற்றும் மனித வளங்களை கிராமிய அமைப்புக்கள் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொடர்பாக சரியான மதிப்பீடொன்று பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. உதாரணமாக 03 பிரதேச செயலகங்களினால் 06 கிராமிய அமைப்புக்களுக்கு ரூபா 11,249,000 தொகையான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதிப்பீட்டின் பிரகாரம் அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரரின் அனுபவம், இயலுமை போன்றவை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் வேலை பூர்த்தி செய்வதற்கு போதியளவான காலம் காணப்படாமையினால் இந்த ஒப்பந்தத்தை குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. தற்போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு முன்னர் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் ஒப்பந்தகாரருக்கு சொந்தமானதாக காணப்படுகின்றத ா என உறுதிப்படுத்த வேண்டியிருந்த துடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 50 சிறிய தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 04 செயற்திட்டங்களின் பணிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. இதனால் அந்த ஒப்பந்தத்திற்கான 05 செயலாற்றல் பிணை முறிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,756,250 | இதற்கான உறுதிப்படுத்தல் ஆவணங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | பிணை முறியை காசாக மாற்றி அரசாங்கத்தின் வருமானத்திற்கு மாற்றுவதற்கு குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தொகையை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்குள்ள இயலுமை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோகத்தர்களினால் நிதிப்பிரமாணம் 880 இற்கு முரணாக பிணை வைக்கப்படாமை அல்லது குறைவாக பிணை வைக்கப்பட்டிருந்தமை. | குறைவாக பிணை வைக்கப்பட்டுள்ள மற்றும் பிணை வைக்காதுள்ள உத்தியோகத்தர்கள் குறித்த பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிணை வைப்பதற்கு தாமதிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தால் அமுல்படுத்தப்பட்ட ''சப்பிரி கமக்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு நிர்மாணத்திற்காக ரூபா 58,270 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உரிய பணத்தை அறவிட்டு இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. | மேலதிகமாக மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) சுன்னாகம் தபால் அலுவலகம் மற்றும் தபால் அதிபரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை நிர்மாணிக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 16,881,625 ஆகும். இதற்கான ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த இரண்டு ஒப்பந்தகாரர்கள் உடன்படிக்கை நிபந்தனைகளுக்காக இணங்கியிருக்கவில்லை. பின்னர் மீண்டும் பெறுகைகளை மேற்கொள்வதற்கு பதிலாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரை செய்யப்படாத கேள்விதாரருக்கு பெறுகைகள் கையளிக்கப்பட்டிருந்தது. அவரால் அந்த பணிகள் பூர்த்தி செய்யாமையினால் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யும் அடிப்படையின் கீழ் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி இரு தரப்பினரும் இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருந்தனர். பின்வரும் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையினால் ஒப்பந்தகாரரால் செலுத்த வேண்டிய ரூபா 1,668,162 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும், ரூபா 845,000 தொகையான செயலாற்றல் பிணை முறியை நிறுத்தி வைப்பதற்கும் மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிடைக்கப்பெற்ற நிதியேற்பாட்டை மீள அனுப்பவேண்டி ஏற்பட்டமை, பொது நலன்புரி பணிகளை நிறைவேற்றாமை, புதிய பெறுகைகளுக்காக காலம் போதியளவு காணப்படாமை போன்ற காரணங்களினால் ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்தகாரரை தெரிவு செய்தல், உடன்படிக்கையின் பிரகாரம் தாமத தண்டப்பணத்தை அறவிடுதல், ஒப்பந்தகாரரை தெரிவு செய்யும் போது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையால் செயலாற்றல் பிணை முறியை மாற்றுவதற்கு தேவையொன்று காணப்படவில்லை. அதுவரையிலும் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவர்களின் அனுபவம் மற்றும் இயலுமை தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | உடன்படிக்கை ஒப்பந்த தரவுகள் (Contarct Data) 60.1 இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது வேலை செய்யப்படாத வேலைகளின் 25 சதவீதம் அதாவது ரூபா 1,169,074 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லலை | இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையால் இந்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இரு தரப்பினரதும் இணக்கப்பாடு கணக்காய்வின் போது விளக்கப்பட்டிருக்க வில்லை. ஒப்பந்த தரவுகள் 60.1 இன் பிரகாரம் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நெடுந்தீவு வடக்கு பிரதேச செயலகத்திற்குரிய வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பீட்டில் ஒரு பகுதி மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளளிப்புச் செய்ய முடியாத ரூபா 494,096 தொகையான இழப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் உரிய பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 104 முதல் 110 வரையான ஏற்பாடுகளை பின்பற்றுதல், குறைநிரப்பு மீளளிப்புச் செய்ய முடியாதுள்ள தொகைக்காக பொறுப்புக்களை நிர்ணயித்தல் மற்றும் மிகுதி நட்டங்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் மூலம் விநியோகிக்கப்பட்ட காசோலைகள் உரித்தாளிக்கு கையளிப்பதற்கு பதிலாக அந்தக் காசோலைகள் தொடர்புடைய விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் கையேற்கப்பட்டிருந்தது. | விரைவாக உரித்தாளிக்கு காசோலைகளை வழங்கும் நோக்கில் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால் காசோலைகள் கையேற்கப்பட்டிருந்தது. | உரித்தாளிக்கு காசோலைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 448,723 தொகையான காசுக் கொடுப்பனவுகள், காசோலைகளை பணமாக்கி கணக்காளரினால் தனிப்பட்டரீதியில் உரித்தாளிக்கு பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவை காசாளரின் கொடுப்பனவு பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவறினால் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாதிருந்த போதிலும் பின்னர் இது சரிசெய்யப்பட்டிருந்தது. | காசுக் கொடுப்பனவுகள் அந்த ஏடுகளில் பதிதல் வேண்டும் |

4. **மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1447 ஆக இருந்ததுடன் 194 வெற்றிடங்களும் 04 பதவிகளில் மிகையும் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றோம். மிகையாான உத்தியோகத்தர்கள் நான்கு பேரில் இருவருக்கு ''சேவையில் இருக்கும் போதே கடமைகளை நிறைவேற்றுதல்'' அடிப்படையில் சேவையாற்றுகின்றனர். ஒருவருக்காக 2021 ஆம் ஆண்டில் இடமாற்றம் கிடைத்திருந்தது. மிகுதி உத்தியோகத்தர்களுக்காக ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்து தருமாறு நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | சேவையின் தேவையை கவனத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகையான உத்தியோகத்தர் களை ஆக்கபூர்வ மானதாக நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |